# மாணவர் முரசு

sph media     மாணவர் முரசு தோற்றம்: 1952     நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி     1 ஏப்ரல் 2024 • திங்கள்

இப்ராஹிமின் உயர்வான எண்ணம்
பக்கம் 5

வயிறா? உண்டியலா? அறியுங்கள்.
பக்கம் 9



பூ பூவின் நிறைவேறாத ஆசை.
பக்கம் 10



# இளையர்களின் மொழி ஆர்வத்தை அதிகரிக்க தொடங்கியது தமிழ்மொழி மாதம்

தொடக்கவிழாவில் நிகழ்ச்சி படைத்த சிறுவர், சிறுமியர்.

**படம்: கார்த்திகேயன்**

சனிக்கிழமை மாலை மீடியாகார்ப் வளாகத்தில் அமைச்சர் இந்திராணி ராஜா தமிழ்மொழி விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் தமிழ்மொழி மாதத்தை தொடங்கி வைத்தார். ‘ஆற்றல்’ என்ற கருப்பொருளுடன் இந்தாண்டு தமிழ்மொழி மாதம் தொடங்கியுள்ளது. இம்மாதம் 30ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் 28ஆம் தேதி வரை 48 பங்காளி அமைப்புகள் மொத்தம் 47 நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளன.

பக்கம் 6–7ல் மேலும் செய்திகள்

**செய்ந்நன்றி அறிதல் : 102**

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

விளக்கம்: ஒரு முக்கியமான நேரத்தில் செய்யும் உதவி சிறிதாக இருக்கலாம். ஆனால் தேவைப்படும் நேரத்தில் செய்த உதவி உலகத்தைவிட மிகவும் பெரியது. அவ்வுதவியால் நிச்சயம் நன்மை கிடைத்ததா என்று ஆராய வேண்டியதில்லை. உதாரணமாக ஒருவர் அறுவை சிகிச்சைக்குத் தேவையான இரத்தத்தைத் தானம் செய்கிறார். சிகிச்சை தோல்வியடைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தக்க நேரத்தில் செய்யப்பட்ட உதவியை நினைத்துப் பார்க்கவேண்டும். அதுவே சிறப்பு. அதுவே அறமும் ஆகும்.

# நிறத்தால் வரும் உருவம்

சிறுவர்களே! இந்தப் படத்தின் உள்ளே ஓர் உருவம் ஒளிந்திருக்கிறது. எளிய கணக்கைச் செய்து வரும் எண்ணுக்கு ஏற்ற வண்ணம் அடித்தால், உருவம் வெளிப்படும். எங்கே ஆரம்பியுங்கள் பார்ப்போம்.





## தொடக்கநிலை 2-3

### செய்ந்நன்றி அறிதல் : 103

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

விளக்கம்: இந்த உதவியைச் செய்தால் இதனால் ஏதோ ஒரு வகையில் பயன் கிடைக்கலாம். எதிர்காலத்தில் நல்லது நடக்கும் என்று எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் செய்யும் உதவி மிகச் சிறந்ததாகும். போற்றத்தக்கது. பயன் எதிர்பார்த்துச் செய்யும் உதவி, எதிர்பார்க்காமல் செய்யும் உதவி இரண்டுமே சிறந்தது என்றாலும் பயன் கருதாமல் செய்த உதவி கடலைவிடப் பெரியது. என்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் உதவும்போது அங்கே அடிப்படையாக இருப்பது அன்பு. அந்த அன்பும் நேசமும் கடலைவிடப் பெரியது ஆகும்.

படத்தில் மொத்தம் எவ்வளவு நபர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து வட்டத்தில் எழுதுங்கள் சிறுவர்களே! ○



## தமிழ்ப்பாடல்

### உதவும் கத்தி

பென்சில் சீவ உதவிடும்
பெரிய பழத்தை நறுக்கிடும்

மரத்துப் பட்டை சீவிடும்
வாழை இலையை அறுத்திடும்

ஓலை நறுக்க உதவிடும்
உடைத்த தேங்காய் கீறிடும்

கயிற்றை அறுக்க உதவிடும்
காய் கறிகள் நறுக்கிடும்

நன்மை செய்ய நித்தமும்
நமக்கு உதவும் கத்தியால்,

கவனக் குறைவி னாலேநாம்
காயப் படுத்திக் கொள்வதா?

- குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

### பார்! பார்!

தரையின் மேலே
தொட்டி பார்!

தொட்டி மேலே
செடியைப் பார்!

செடியின் மேலே
பூவைப் பார்!

பூவின் மேலே
வண்டைப் பார்!

வண்டின் மேலே
பளபள க்கும்

வர்ணம் உண்டு;
அதையும் பார்!

கீழே இருக்கும் ரஷ்ய பொம்மையின் அடிப்பாகத்தைக் கண்டுபிடித்து பொருத்துங்கள் மாணவர்களே!



①


②


③


④


⑤


⑥


தொடக்கநிலை 4

## செய்ந்நன்றி அறிதல்: 104

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

விளக்கம்: தினை என்பது கடுகு போல இருக்கும் சிறு தானியம். பனை மரம் என்பது ஆறு மாடிகளைவிட உயரமான மரம். மற்றவர் நமக்கு தினையைப்போல மிகச் சிறிய உதவியைச் செய்தாலும் அதனை பனைமரத்தின் உயரம்போல கருதிப் போற்ற வேண்டும். வகுப்பில் கீழே விழுந்த பென்சிலை ஒருவர் நமக்கு எடுத்துக்கொடுத்தால் சிறிய உதவி பெரிய உதவி என்று பார்க்காமல் நன்றி சொல்ல வேண்டும். உதவியின் பயன் அறிந்தவர்களே அதை உயர்வாகக் கருதுவர். பயன் அறியாதவர்கள் சரியான நேரத்தில் எவ்வளவு பெரிய உதவியைச் செய்தாலும் அதை உணர மாட்டார்கள்.

நீதிக்கதை

# புரிந்துகொள்ளாதவருடன் பேசினால் வேதனையே மிஞ்சும்

ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்று இருந்தது. அதில் குருவி ஒன்று கூடு கட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. ஒருநாள் கனத்த மழை பெய்தது. குளிர் கடுமையாக வாட்டியது.

அப்போது அம்மரத்திற்கு குரங்கு ஒன்று வந்தது. குரங்கு, குளிரால் நடுங்கியது.

குளிரில் நடுங்கும் குரங்கைப் பார்த்த குருவி அதன் மேல் இரக்கம் கொண்டது.

உடனே குரங்கிடம், “உனக்கு கை கால்கள் இருந்தும் இப்படி குளிர், மழை, வெயில் போன்றவற்றினால் ஏன் கஷ்டப்படுகிறாய்? நீ ஏன் உனக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளக் கூடாது?” என்று பரிவுடன் கேட்டது.

ஆனால், அதனைக் கேட்ட குரங்கு “இத்தனைச் சிறிய உருவம் கொண்ட நீ எனக்கே புத்தி சொல்கிறாயா? எனக்கு வீடு கட்டிக்கொள்ளும் சக்தி கிடையாது. ஆனால் பிரித்து எரிகிற ஆற்றல் உண்டு,” என்று கூறி குருவியின் கூட்டைப் பிரித்து, பிய்த்து எரிந்தது.

வீட்டை இழந்த குருவி மூடனுக்கு அறிவுரை சொன்னதால் வந்த வினையை எண்ணி வருந்தியது. சிறுவர்களே! அறிவில்லாதவர்களுக்கு அறிவுரை கூறினால் நமக்கு கெடுதலே நிகழும் என்பதை இக்கதையில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

இதைத்தான் ஔவை பாட்டி, ‘பாம்பொடு பழகேல்’ என்று ஆத்திச்சூடியில் சொல்லியிருக்கிறார். பாம்பானது பால் கொடுத்தவருக்கும் நஞ்சைக் கொடுக்கின்ற தன்மையினை உடையது.

தமக்கு நன்மையையே ஒருவர் செய்தாலும் அதைக் கருதி நன்றி பாராட்டாமல் தீமையையே செய்பவர்கள் பாம்பினைப் போன்றவர்கள். அத்தகையவர்களோடு பழக்கத்தைக் கொள்ளாதே என்பதை உணர்த்தும்பொருட்டு ‘பாம்பொடு பழகேல்’ என்று ஔவையார் கூறியிருக்கிறார்.



## பெயர் என்ன?

மார்க்கஸின் பெற்றோருக்கு மொத்தம் மூன்று மகன்கள். அந்தப் பெற்றோர் எப்போதும் வித்தியாசமாகச் சிந்திப்பவர்கள். பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதிலும் வித்தியாசமாக செயல்பட்டனர்.

அக்டோபர் மாதத்தில் பிறந்த மகனுக்கு அக்டோ என்று பெயர் வைத்தனர்.

டிசம்பரில் பிறந்த பையனுக்கு டிசம் என்று வைத்தார்கள்.

அவர்களின் மூன்றாவது மகன் நவம்பரில் பிறந்தவன். அவனுக்கு அவர்கள் என்ன பெயர் வைத்தார்கள்?

பக்கம் 11ல் பெயரைப் பாருங்கள்.

## செய்ந்நன்றி அறிதல்: 105

உதவி வரைந்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

விளக்கம்: ஒருவர் செய்யும் உதவிக்கு அதன் அளவைப் பொறுத்து மதிப்பும் சிறப்பும் கிடைப்பதில்லை. அது யாருக்குச் செய்யும் உதவி என்பதைப் பொறுத்து அந்த உதவி மதிப்பிடப்படும். இதைத்தான் "பாத்திரம் அறிந்து பிச்சை போடு" என்று சொல்வார்கள். பாடத்தில் உதவி கேட்கும் மாணவனுக்கு உதவி செய்கிறீர்கள். அந்த மாணவன் சிறந்த தேர்ச்சி பெறுகிறான். அப்போது சொல்லிக் கொடுத்தவருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த உதவி மதிப்புமிக்கதாக இருக்கும். குறும்புத்தனம் செய்ய உதவி கேட்கும் நண்பனுக்கு உதவினால் அதனால் தண்டனைதான் கிடைக்கும்.

**தன்னம்பிக்கை கதை**

# நம்பிக்கையோடு நீ நடந்தால் வெற்றி நிச்சயம்

இப்ராஹிமின் தந்தை ஒரு தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டு இருந்தார். அவரின் வருமானம் வீட்டிற்குப் போதுமானதாக இருந்தது.

இப்ராஹிமுக்கு ஒரு தம்பி இருந்தான். அவன் பெயர் இஸ்மாயில்.

இருவரும் அருகில் இருந்த பள்ளியில் படித்துக்கொண்டு இருந்தனர்.

ஒருநாள் சகோதரர்கள் அடுக்குமாடித் தளத்தின் கீழே விளையாடிக்கொண்டு இருந்தனர்.

அப்போது 'பும்பும்' என்று வித்தியாசமான சத்தம் கேட்டது. சத்தம் வித்தியாசமாக இருந்ததால் அந்த சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதை அறிந்துகொள்ள இப்ராஹிம் சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றான்.

அங்கே ஓர் அழகிய புத்தம்புது வாகனம் நின்றுகொண்டு இருந்தது. அதிலிருந்து புத்தம் புதிய உடையை அணிந்து ஒரு வாலிபன் இறங்கினான்.

அவன் வண்டியின் அருகே நின்றுகொண்டு யாருக்காகவோ காத்திருந்தான்.

அப்போது இப்ராஹிம் அந்த வாகனத்தின் அழகை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனைப் பார்த்த அந்த வாலிபன், "இந்த வாகனம் அழகாக இருக்கிறதா? என் அண்ணன் என்னுடைய பிறந்தநாளுக்கு இந்த வாகனத்தைப் பரிசாக அளித்தார்," என்றான்.

"உனக்கும் என்னுடைய அண்ணன் போல ஓர் அண்ணன் இருந்தால் உனக்கும் இதுபோன்ற பரிசு கிடைக்கும் என்று நினைக்கிறாய் அல்லவா?" என்று கேட்டான்.

அதற்கு இப்ராஹிம் சிரித்துக்கொண்டே, "இல்லை... இல்லை... அப்படியோர் அண்ணனாக நான் வளரவேண்டும் என்று விரும்புகிறேன். நான் நன்கு படித்து நல்ல வேலையில் சேர்ந்து என் தம்பிக்கு இதுபோன்று விலையுயர்ந்த பரிசு வாங்கிக் கொடுக்கவேண்டும்," என்று நினைத்தேன் என்றான்.

அதைக் கேட்ட அந்த வாலிபன் வெட்கித் தலைகுனிந்தான்.

எப்போதும் எண்ணங்கள் உயர்வாக இருக்கவேண்டும். எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால்தான், 'எண்ணம் போல் வாழ்வு' என்றும் 'எதை நினைக்கிறோமோ அதுவாக ஆகிறாய்' என்பதும் வலிமை வாய்ந்த வார்த்தைகளாகவே கூறப்பட்டு வருகிறது.

"நீ உன்னை வலிமை வாய்ந்தவன் என்று எண்ணினால் வலிமை படைத்தவனாகவே ஆகிறாய்" என்றார் விவேகானந்தர்.

உன்னுள் நல்ல செயல் இருந்தால் உனக்குள் நம்பிக்கை பிறக்கும். நம்பிக்கையோடு நீ நடந்தால் வெற்றி நிச்சயமாகும்.

## ஒரெழுத்து சொற்கள்

| | |
|---|---|
| சிரிக்கும் எழுத்து | ஈ |
| அழைக்கும் எழுத்து | வா |
| கேட்கும் எழுத்து | தா |
| துரத்தும் எழுத்து | போ |
| வெறுக்கும் எழுத்து | சீ |
| உதவும் எழுத்து | கை |
| பூசும் எழுத்து | மை |
| வலிக்கும் எழுத்து | ஆ |
| சுடும் எழுத்து | தீ |
| மலரும் எழுத்து | பூ |

மீடியாகார்ப் வளாகத்தில் மார்ச் 30ஆம் தேதி மாலை, இவ்வாண்டின் தமிழ்மொழி விழாவைத் தொடங்கி வைத்தார் அமைச்சர் இந்திராணி ராஜா (நடுவில்).

அனுஷா செல்வமணி

சனிக்கிழமை மாலை அமைச்சர் இந்திராணி ராஜா தமிழ்மொழி விழாவின் தொடக்க நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அவர், “பிள்ளைகளுக்கு இளம் வயதிலேயே தமிழ்மொழிப் புழக்கத்தைக் கொண்டு சேர்க்க சமூக ஊடகம் ஒரு சிறந்த கருவி.

“தொலைக்காட்சி, யூடியூப் காணொளிகள், மற்றும் டிக்டாக் போன்ற தளங்கள் மூலம் தமிழ்மொழி சிறுவர்களுக்கு எளிதில் சென்றடையும்,” என்று குறிப்பிட்டார்.

அடுத்த தலைமுறையினர் தமிழ்மொழியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் இந்தாண்டு 65 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் இளையர்களால் ஏற்பாடு செய்யப்பட்டவை.

இளையர்களுக்கு அப்பாற்பட்டு சிறுவர்களுக்கு தமிழ்மொழி மீதான ஆர்வத்தை விதைக்க தமிழ்மொழி மாதத்தில் அவர்களுக்கு பலவிதமான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலக்கியம், கலை, கலாசாரம் ஆகிய கூறுகளில் சிறுவர்களுக்கு கதை சொல்லும் அங்கம் போன்ற பல நிகழ்ச்சிகள் இம்மாதம் முழுவதும் நடைபெற இருக்கின்றன.

படங்கள்: கார்த்திகேயன்

சனிக்கிழமை நடைபெற்ற தொடக்க விழாவில் இளையர்கள் கலந்துகொண்டு இயல், இசை, நாடகம் ஆகியவற்றைப் படைத்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

# தமிழ்மொழி விழா

## ‘ஆற்றல்’ என்ற கருப்பொருளில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள்

பிரீத்தி அசோகன்

நமது அன்றாட வாழ்க்கையை நடத்த, பல மொழிகள் தேவைப்படலாம். ஆனால், நம் உணர்வுடன் கலந்தது தாய்மொழிதான்.

எண்ணற்ற மொழிகளைக் கற்கிறோம். நம்மை நம் பண்பாட்டு வேருடன் இணைப்பது தாய்மொழி. அதைக் கற்காமல் இருப்பது வாழ்வின் அடிப்படையை நிறைவு செய்யாது.

அப்படிப்பட்ட தாய்மொழியின் சிறப்பை உணர்த்த வந்துவிட்டது தமிழ்மொழி விழா. இளம் தமிழ்ப் பிரியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு மாபெரும் விழா.

தமிழ்மொழி விழா 2024, மார்ச் 30ஆம் தேதி முதல் ஏப்ரல் 28ஆம் தேதி வரை நடைபெறும்.

இவ்விழாவானது 2007ல் இருந்து வளர்தமிழ் இயக்கத்தால் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகின்றது.

இதன் நோக்கம் சிங்கப்பூர்த் தமிழர்களிடத்தில், குறிப்பாக மாணவர்களிடத்தில், தமிழ்மொழியைப் பேச ஊக்குவிப்பதும் தமிழைப் பற்றி பல அரிய தகவல்களைக் கற்றுக்கொடுப்பதுமாகும்.

இவ்வாண்டின் கருப்பொருள் ‘ஆற்றல்’. மாணவர்கள் தங்களின் ஆற்றலைக் காண்பிக்கவும் வளர்க்கவும் பல மேடைகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

இவ்வாண்டு 48 பங்காளி அமைப்புகள் 47 நிகழ்ச்சிகளைப் படைக்க உள்ளன.

மாணவர்கள் கலந்துகொண்டு தங்களின் தமிழ்மொழிப் புலமையை வெளிக்காட்டலாம்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் நடவடிக்கைகளில் பங்குபெற்று பல அனுபவங்களைப் பெறலாம். பல பயிலரங்குகள், போட்டிகள், முகாம்கள், சிந்தனையைத் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### தமிழ்மொழிப் பயிலரங்கம்

பாலர் பள்ளி 1, 2 மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பயிலரங்கு முகாம்.
தேதி: 6 ஏப்ரல் 2024
நேரம்: காலை 10 முதல் நண்பகல் 12 மணி வரை
ஏற்பாட்டாளர்: Indian.SG
இடம்: Possibility Room–தேசிய நூலக கட்டடம்
பதிவு செய்ய: www.indian.sg

### ஆற்றல்மிகு தமிழ்

தமிழ்மொழி பற்றி ஒரு பயிலரங்கு.
தேதி: 6 ஏப்ரல் 2024
நேரம்: மாலை 6.30 முதல் இரவு 8.30 மணி வரை
ஏற்பாட்டாளர்: சிங்கப்பூர் தமிழர் இயக்கம்
இடம்: உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய அரங்கம்
இலவசம், முன்பதிவு தேவையில்லை.

### ‘கேம்ப் வெற்றி’ முகாம்

இம்முகாம், முத்தமிழை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும். கற்றல் அனுபவங்கள், கதைசொல்லல், பாடல்கள், உணவு வகைகள் போன்றவை கற்பிக்கப்படும்.
தேதி: 6 ஏப்ரல் 2024
நேரம்: காலை 10 முதல் மாலை 6.30 மணி வரை
ஏற்பாட்டாளர்: கிரியேட் SG
இடம்: சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம்(சிண்டா)
பதிவு செய்ய: https://forms.gle/BbB2WSbk8mYYtwy38

### சின்னஞ்சிறு மாகோ 2024

மாணவர்களுக்கான தமிழ் கதை சொல்லும் போட்டி மற்றும் பயிலரங்கம். மாணவர்கள், பெற்றோர் கலந்துகொள்ளலாம்.
தேதி: 7 ஏப்ரல் 2024
நேரம்: காலை 10 முதல் நண்பகல் 2 மணி வரை
ஏற்பாட்டாளர்: ஏ.கே.டி. கிரியேஷன்ஸ்
இடம்: உட்லண்ட்ஸ் வட்டார நூலகம்
பதிவு செய்ய: www.aktcreations.com/mago24

## செய்ந்நன்றி அறிதல்: 106

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

விளக்கம்: அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த சான்றோர்களின் நட்பை ஒருநாளும் மறக்கக்கூடாது. சான்றோர்களிடம் நாம் பெற்ற அறிவும் பண்பும் தீய வழியில் செல்லாமல் நல்ல வழியில் செல்ல வழிகாட்டியாக இருக்கும். இரண்டாவது, நாம் துன்பத்தில் இருக்கும்பொழுது நமக்கு உதவி செய்தவரின் உறவையும் நட்பையும் விட்டுவிடக்கூடாது. நாம் சிறப்பாக இருக்கும்பொழுது நம்மைச்சுற்றி பலரும் இருப்பார்கள். ஆனால் நமக்கு துன்பம் ஏற்படும்போது பலரும் நம்மை விட்டு விலகி இருப்பர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நமக்கு துணையாக இருந்தவரே உண்மையான நண்பர். உண்மையான நட்பு கிடைப்பது அவ்வளவு எளிதல்ல. ஆதலால் அவர்களைத் துறப்பது அறிவில்லாத்தனம் எனலாம்.

# பூமிக்காக ஒரு மணி நேரம்

லாவண்யா வீரராகவன்

சுற்றுச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம், பல்லுயிர் பன்முகத்தன்மையின் பாதுகாப்பு ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி கடந்த மார்ச் 23 அன்று நடைபெற்றது.

சிங்கப்பூரில் உலக வனவுயிர் நிதி (World Wildlife Fund) அமைப்பின் சார்பில், 'பூமிக்காக ஒரு மணி நேரம்' எனும் கருப்பொருளில், 'விஸ்மா ஏட்ரியா' கடைத்தொகுதியில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பல்வேறு கலை நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வின் முக்கிய அங்கமாக சுற்றியுள்ள பகுதிகளில் தேவை இல்லாத மின் விளக்குகள் ஒரு மணி நேரம் அணைக்கப்பட்டன. இதனால் ஏற்படும் நேர்மறை விளைவுகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.


சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக ஒரு மணி நேரம் விளக்கு அணைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. படம்: உலக வனவிலங்கு நிதி அமைப்பு

மாணவர்கள், சுற்றுச்சூழல் அமைப்பு குறித்தும் பவளப்பாறை, ஆமை உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்கள் குறித்தும் அறிந்து கொள்ளும் வகையில் விளக்கப்படங்கள் கொண்ட பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

வண்ணம் தீட்டும் சாவடி, குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் வனவிலங்கு, சுறாமீன்கள், சிப்பிகள், கடல்வாழ் உயிரினங்கள் குறித்த தகவல்களை விளக்கிச் சொல்லும் சாவடிகளில் சிறுவர்களும் பெற்றோரும் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

ஹென்ரி பார்க் தொடக்கப்பள்ளியில், தொடக்கநிலை ஆறாம் வகுப்பில் பயிலும் க்ருத்திக் ஆனந்த், 12 தன் பள்ளியின் சார்பில், குழுவாக இணைந்து வேதிப் பொருள்களற்ற சுத்தம் செய்யும் திரவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

அவர், "நாம் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய 'பிளாஸ்டிக்குகளை' உபயோகிப்பது, அதிக வேதிப்பொருள்கள் கலந்த திரவங்கள் கொண்டு சுத்தம் செய்வது என சுற்றுப்புறத்துக்கு கேடு விளைவிக்கும் பலவற்றைச் செய்கிறோம். அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என சொல்வதற்கு வந்துள்ளோம்," என்றார்.

இந்த நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட ரிவான் பயானி, 9, "நாம் வாழும் இதே பூமியில்தான் விலங்குகள், பறவைகள் வாழவேண்டும். அதை நாம் அழிப்பது தவறு என புரிந்துகொண்டேன். இதனை என் நண்பர்கள் அனைவரிடமும் சொல்வேன்," என்றார்.

ஹென்ரி பார்க் தொடக்கப்பள்ளி அறிவியல் ஆசிரியை ஹஸ்லினா ஹபீப் ஹாசன், "எங்கள் மாணவர்கள் தயாரித்துள்ள வேதிப் பொருள்களற்ற சுத்தம் செய்யும் திரவம் விநியோகிப்பதும், பார்வையிடும் சிறுவர்களுக்கு நீடித்த நினைத்தன்மை குறித்து விளக்குவதும் மகிழ்வளிக்கிறது" என்றார்.

"நாம் ஒருமுறை மட்டுமே பயன் படுத்தக்கூடிய நெகிழிகளை உபயோகிப்பது, அதிக வேதிப் பொருள்கள் கலந்த திரவங்கள் கொண்டு சுத்தம் செய்வது என சுற்றுப் புறத்துக்கு கேடு விளைவிக்கும் பலவற்றைச் செய்கிறோம். அவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

க்ருத்திக் ஆனந்த்
தொடக்கநிலை 6,
ஹென்ரி பார்க் தொடக்கப்பள்ளி.

"நாம் வாழும் இதே பூமியில்தான் விலங்குகள், பறவைகள் வாழவேண்டும். அவற்றுக்கும் இதுதான் வீடு. அதை நாம் அழிப்பது தவறு என புரிந்துகொண்டேன். இதனை என் நண்பர்கள் அனைவரிடமும் சொல்வேன்.

ரிவான் பயானி

உங்களுக்குத் தெரியுமா?

## செய்ந்நன்றி அறிதல்: 107

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.**

விளக்கம்: எழுமை என்ற சொல்லுக்கு உயர்ச்சி என்று பொருள் கொள்ளலாம். அது இங்கே உயர்ந்தோரைக் குறிக்கிறது. உயர்ந்தவர்கள் மற்றவரிடம் இருந்து ஓர் உதவியைப் பெற்றால் அதனை ஒவ்வொரு பிறவியிலும் நினைத்துப் பார்ப்பார்கள். உதவி பெறுவது அரிதானது. அந்த உதவிக்கு நன்றியுடன் இருப்பது மேன்மையான ஒன்று. நமது இயல்பு, எண்ணங்கள், செயல்கள் ஆகியவை நமது அணுக்களில் பதிவாகிறது. ஆதலால் நமது இயல்பு, எண்ணங்கள், செயல் ஆகியவற்றில் கவனம் தேவை.

# வயிறா? உண்டியலா?

விலங்குகளின் வடிவத்தில் உண்டியல் இருப்பதைப் பார்த்திருப்போம். அதிலும் உண்டியல் என்றாலே முதலில் நினைவுக்கு வருவது பன்றி வடிவத்தில் இருக்கும் உண்டியல் (pigs bank)தான். ஆனால், இங்கு உயிருள்ள ஒரு விலங்கின் வயிற்றில் உண்டியல் போலப் பல நாணயங்கள் இருந்துள்ளன.

அமெரிக்காவில் உள்ள உயிரியல் பூங்காவில் வளர்க்கப்படும் முதலையின் வயிற்றில் 70 நாணயங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டது.

அமெரிக்காவின் நெப்ராகத்தா மாநிலம், ஒமாகா நகரத்தில் உள்ளது ஹென்றி டோர்லி உயிரியல் பூங்கா.

மீன்கள் கண்காட்சி மையத்தில் வளர்ந்து வரும் உயிரினங்களுக்கு வழக்கம்போல் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பூங்காவில் உள்ள அனைத்து விலங்குகளுக்கும் ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

அதில் 36 வயதான தியோடாக்ஸ் என்ற முதலையின் வயிற்றில் உலோகம் இருப்பது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து தியோடாக்ஸ் முதலைக்கு மயக்க மருந்து கொடுத்து, வயிற்று வழியாக கேமராவின் உதவியுடன் 70 அமெரிக்க நாணயங்கள் கண்டறியப்பட்டு வெளியில் எடுக்கப்பட்டன. இந்தச் சம்பவம் குறித்துத் தங்களது சமூக வலைத்தளத்தில் உயிரியல் பூங்கா நிர்வாகம் பதிவிட்டுள்ளது.

முதலைக்குச் சிகிச்சை பார்த்த கால்நடை மருத்துவர் டாக்டர் கிறிஸ்டினா ப்ளூக் இதுகுறித்து, “பூங்காவிற்கு வரும் பார்வையாளர்கள் முதலை இருக்கும் தண்ணீரில் நாணயங்களைப் போடுகின்றனர். இதன் காரணமாக நாணயங்களை முதலை விழுங்கியுள்ளது,” எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பூங்காவிற்கு வரும் பார்வையாளர்கள் தண்ணீர் இருக்கும் பகுதிகளில் நாணயங்களைப் போடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# குளம், கிணறுகளில் காசு வீசுவதன் அறிவியல் காரணம்

*பழங்காலத்தில் நம் முன்னோர்கள் பயன்படுத்திய காசுகள் ஏற்படுத்திய சடங்குகள் பலவற்றில் இருக்கும் அறிவியல் பூர்வமான உண்மை என்னவென்று தெரியாமலே நாம் அதை செய்து கொண்டிருக்கிறோம்.*

*அதில் ஒன்றுதான் குளங்களில் காசு வீசும் சடங்கு. இச்செயலுக்கு பின்னே இருக்கும் அற்புதமான உண்மை என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.*

*பழங்காலத்தில் நமது முன்னோர்கள் பெரும்பாலும் பயன்படுத்திய பொருள்கள் அனைத்துமே செம்பு உலோகத்தால்தான் செய்யப்பட்டன.*

*குறிப்பாக நீர் அருந்துவதற்கும் குளிப்பதற்கும் செம்பு பாத்திரத்தில் இருக்கும் நீரையே உபயோகித்தனர். இதனால் உடல் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தி, மனோதிடம் போன்றவை நம் முன்னோர்களுக்கு அதிகம் இருந்தது.*

*இதேபோல் அக்காலத்தில் அவர்கள் பயன்படுத்திய நாணயங்கள் அனைத்தும் செம்பு உலோகத்திலேயே செய்யப்பட்டன. எனவே குளத்தில் இருக்கும் நீரை சக்தி வாய்ந்ததாக மாற்றவும் தங்களிடமிருந்த செம்புக் காசுகள் சிலவற்றை அக்குளத்தில் வீசும் வழக்கத்தைக் கடைப்பிடித்தனர்.*

*இப்படி பலரும் வீசிய செம்புக் காசுகள் கோயில் குளத்தில் நன்கு ஊறி, அந்த செம்பில் இருக்கும் சத்துகள் அந்த நீரில் கலப்பதால் அந்த நீரில் கிருமிகள் வளர்வதை தடுத்ததோடு, அக்குளத்தின் நீரைக் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்தியவர்களுக்கு ஆரோக்கியத்தை தந்தது.*

**செய்ந்நன்றி அறிதல் : 108**

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

விளக்கம்: பிறர் நமக்கு உதவி செய்தால் நன்றியுடன் இருக்க வேண்டும். நன்றியை மறப்பது அறம் ஆகாது. நன்றியை மறந்தால், நமக்கு மற்றவர்கள் உதவ முன்வரமாட்டார்கள். நன்றியை மறக்காமல் இருந்தால் நாமும் பிறருக்கு உதவ நினைப்போம். அதேநேரத்தில், மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமையை உடனே மறப்பது நன்மை பயக்கும். நன்மை அல்லாதவை மனதுக்கு வேதனை தரும். கவலைப்படுவோம். நம்மால் யோசிக்க முடியாது. நமது செயல்திறன் குறையும். கவனமும் ஊக்கமும் குறையும். கோபத்தால் பகையும் ஏற்படும். நல்லது அல்லாதவற்றை மனதில் வைத்திருந்தால் வஞ்சம்தான் வளரும். அது விஷம். எனவே நன்மை அல்லாதவற்றை அன்றே மறந்துவிட வேண்டும்.

# தேன் விரும்பிய பூ பூவின் நிலை

கற்பனைக் கதை

முன்பு பூ பூ என்ற கரடி வெள்ளை நிறத்தில் இருந்தது. அது கறுப்பு நிறமானதன் காரணம்.... ஒருநாள் பூ பூ என்ற கரடிக்கு தேன் குடிக்க ஆசை ஏற்பட்டது.

அது உடனே தேனீயிடம் சென்று, “எனக்கு தேன் தருகிறாயா?” என்று கேட்டது. தேனீ, “நீ எனக்கு தாமரைப்பூ கொடுத்தால் நான் தேன் தருகிறேன்,” என்றது.

உடனே பூ பூ குளத்தில் இருந்த தவளையிடம், தாமரைப்பூ கேட்டது. அதற்கு தவளை, “இங்கு பெரிய பாம்பு இருக்கிறது. அதை விரட்டினால் நான் தாமரைப் பூ தருகிறேன்,” என்றது.



உடனே பூ பூ பாம்பாட்டியிடம் அந்த பாம்பைப் பிடிக்கச் சொன்னது. அவர், “நல்ல சட்டை வேண்டும். தந்தால் பாம்பைப் பிடிக்கிறேன்,” என்றார்.



பூ பூவும் தையல்காரரிடம் சென்று பாம்பாட்டிக்கு சட்டை கேட்டது. அவர், “உன்னுடைய வெள்ளை நிற உரோமத்தைக் கொடுத்தால் நான் உனக்கு சட்டை தருகிறேன்,” என்றார்.



பூ பூவும் உடனே தன்னுடைய வெள்ளை உரோமத்தைக் கொடுத்துவிட்டு பாம்பாட்டிக்கு சட்டை கேட்டது. ஆனால் கெட்ட எண்ணம் கொண்ட தையல்காரர் ஒரு தந்திரம் செய்தார்.



அருகில் இருந்த நெருப்புப் பந்தத்தை எடுத்து பூ பூ மீது வீசினார். அதனால் பூ பூவின் உடலின் மேலே மிச்சமிருந்த உரோமங்களும் எரிந்து சாம்பலானது.



நேர்மையில்லாத அந்த தையல்காரரை நம்பியதால் ஏமாந்துபோனது பூ பூ. தேனீ, தவளை, பாம்பாட்டி, தையற்காரர் என பலரின் ஆசைகளை நிறைவேற்ற அலைந்தும் அனைத்தும் வீணானது. அத்துடன் தன்னுடைய ஆசையும் நிறைவேறாது காட்டில் கறுப்பு வண்ணத்தில் சுற்றித்திரியத் தொடங்கியது கரடி. ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஆசை இருக்கத்தான் செய்யும். ஆனால் அது நேர்மையானதா? நியாயமானதா என்பதைப் பார்க்கவேண்டும்.

## செய்ந்நன்றி அறிதல் : 109

**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.**

விளக்கம்: ஒருவர் கொலை செய்வதுபோன்ற துன்பத்தை நமக்குச் செய்தாலும் அதனை அப்பொழுதே மறந்து விடவேண்டும். அவர் நமக்கு முன்பு செய்த ஏதாவது ஒரு நல்லதை/உதவியை நினைத்துப்பார்த்தால் அவருடைய நல்ல குணங்களும் அவர் நமக்கு செய்த நன்மைகளும் நினைவுக்கு வரும். இத்துன்பம் மறந்துவிடும். அப்போது, அந்த தீமையும் உள்ளத்தில் ஏற்பட்ட பகை எனும் தீமையும் மறந்துபோகும். மேலும், முன்னர் நமக்கு நன்மை செய்தவர் இன்று வேண்டுமென தீங்கு செய்திருக்க மாட்டார். மறப்பதால் நம் மனதில் பகை, கோபம் போன்ற தீய எண்ணங்கள் வளராது. தீய எண்ணம் என்பது விஷமாகும். அது நமக்குத்தான் தீங்கு விளைவிக்கும்.

1. என்னைத் தெரியாத போது தெரிந்து கொள்ளும் ஆவல். தெரிந்த பிறகு பகிர்ந்து கொள்ளும் ஆசை. நான் மறைக்கப்பட வேண்டியவன். நான் யார்?
2. நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்?
3. விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன?
4. கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது. அது என்ன?
5. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் கிடையாது. யார் அவர்கள்?

## தமிழ் முரசு
STTU

# நல்லாசிரியர் விருது 2024

**MOST INSPIRING TAMIL TEACHERS' AWARD**

## தமிழாசிரியர்களைச் சிறப்பிக்க வாரீர்!

நல்லாசிரியர் விருதுக்குத் தகுதியானவர்களை மாணவர்கள், பெற்றோர், சக ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், பள்ளித் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் முன்மொழியலாம். அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனைத்துப் பள்ளிகள் மற்றும் உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் ஆகியவற்றின் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். www.tllpc.sg மற்றும் www.tamilmurasu.com.sg ஆகிய இணையத் தளங்களிலிருந்தும் படிவங்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். https://go.gov.sg/mitt2024nominationform மற்றும் https://go.gov.sg/mitt2024nominationformel ஆகிய இணைய முகவரிகளிலிருந்தும் நேரடியாகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கலாம். தலைமை ஆசிரியரின் கையொப்பம் தேவையில்லை. பரிந்துரையின் இறுதிநாளுக்குப் பிறகு நாங்களே தலைமை ஆசிரியரின் கருத்துகளைப் பெறுவோம்.

குறிப்பு: கடந்த மூன்று ஆண்டுகளின் வெற்றியாளர்கள் இந்த ஆண்டு கலந்துகொள்ள இயலாது.

**பரிந்துரைகள் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய இறுதி நாள் 01 ஏப்ரல் 2024**

**இத்தேதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் அல்லது முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. நல்லாசிரியர் விருது விழா 21 செப்டம்பர் 2024 சனிக்கிழமை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெறும்.**

## வாசிப்பை நேசிப்போம்

தலைப்பு: ஒன்பது காலைகள்: இளையோர் நாவல்
நூலாசிரியர்: ஆனந்த் குமார், துரை
பதிப்பாளர்: சென்னை: வம்சி புக்ஸ், 2022
குறியீட்டு எண்: J Tamil ANA

பள்ளியில் நடந்த விளையாட்டுப் போட்டியில் ஒரு சிக்கலான சவாலைச் சந்திக்கிறார்கள் மாணவர்கள். அது மட்டுமா? ஒரு இத்தாலிய மந்திரவாதியையும், கரீபியத் தீவு ஒன்றையும், அதில் சில புதிய நண்பர்களையும் சந்திக்கிறார்கள். இந்த சந்திப்புகள் மூலமாக இவர்கள் கற்றது என்ன? லட்சக் கணக்கில் செலவு செய்து போட்டியிட்ட எதிரணியை, பணமே செலவு செய்ய முடியாத இவர்கள் சவாலில் எதிர்கொண்டார்களா? நூலை உடனே இரவல் வாங்கிப் படித்து, பார்த்து மகிழுங்கள்.

அனைத்து உரிமைகளும் காப்புரிமைக்கு உட்பட்டவை.
NLB | National Library Board Singapore

### பக்கம் 3க்கான விடைகள்



### பக்கம் 4க்கான விடை

### பெயர் என்ன?

நவம் என்று பெயர் வைத்தார்கள் என்று சொன்னீர்களா? தவறு. மொத்தம் மூன்று மகன்களின் ஒரு மகன் பெயர் மார்க்கஸ் என்பதுதான் புதிரின் முதல் வாக்கியத்தில் தரப்பட்டிருக்கிறதே!

### விடுகதை விடைகள்

1. ரகசியம்
2. பென்சில்
3. தும்பிக்கை
4. நிழல்
5. எறும்புக்கூட்டம்

# ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் உங்களுக்காக மலர்கிறது மாணவர் முரசு

## மாணவர்களே! உங்கள் கட்டுரைகளை மாணவர் முரசுக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: tmstudent@sph.com.sg
63194031 அல்லது 91800754 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

அஞ்சல் முகவரி: SPH MEDIA LIMITED,
News Centre, Tamil Murasu, Maanavar Murasu,
1000 Toa Payoh North, Singapore 318994.
பள்ளிகளில் மாணவர் முரசை மொத்தமாக நீங்கள் வாங்க:
cirschool@sph.com.sg, Tel: 6319 3692.

# ரிவர் வாண்டர்ஸின் 10ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

பிரீத்தி அசோகன்

வார இறுதி நாட்களில் என்ன செய்வது என்று தெரியவில்லையா? விலங்குகள் பிடிக்குமா? அல்லது விளையாட்டுகள் பிடிக்குமா? இல்லையெனில் இரண்டுமே பிடிக்குமா? அப்படி என்றால் உடனே 10ஆம் ஆண்டுவிழாவைக் கொண்டாடும் ரிவர் வாண்டர்ஸின் அதிசயங்களுக்குச் செல்லுங்கள்!

அங்கு உற்சாகம் தூண்டக்கூடிய பல நிகழ்வுகள் பிப்ரவரி 28 முதல் நடைபெறுகின்றன. ‘பிங்கோ விளையாட்டு’, ‘இலவச விலங்கு டாட்டு’, ‘விலங்கு பராமரிப்பாளர்கள் சந்திப்பு’, ‘வனவிலங்கு மற்றும் இயற்கை பற்றிய விளையாட்டு’, ‘குடும்பத்தினருடன் கூடாரம் கட்டுதல்’, ‘மானாட்டிகள் மற்றும் பிற வனவிலங்குகள் சந்திப்பு’ போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**உறுப்பினர்களுக்கும் பல சலுகைகள் உள்ளன!**

2014ல் தொடங்கிய ரிவர் வாண்டர்ஸ் இவ்வாண்டு 10ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. அதனை ஒட்டி பல சலுகைகள் வழங்குகின்றது.

ஒவ்வொரு பெரியவர் நுழைவுச்சீட்டுக்கும் இரண்டாவதாக வாங்கும் நுழைவுச்சிட்டு 10 வெள்ளி மட்டுமே. இச்சலுகை பிப்ரவரி 28 முதல் ஏப்ரல் 14 வரை மட்டுமே நடப்பில் இருக்கும்.

உலக ஆட்டிசம் மாதத்திற்கு ஆதரவாக, ரிவர் வாண்டர்ஸ் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக ஏப்ரல் 6 (சனிக்கிழமை) மற்றும் ஏப்ரல் 7 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு திறக்கப்படுகின்றது.

அங்கு இருக்கும் செயல்பாட்டுச் சாவடிகள் விருந்தினர்களுக்காக காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை, காட்சி அட்டவணைகளோடு சிறப்பாகத் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்ய ரிவர் வாண்டர்ஸ் இணையத்தளத்திருக்குச் செல்லவும்.

பத்து ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ரிவர் வாண்டர்ஸுக்கு ஆதரவு அளித்து மகிழ்ச்சி அடையுங்கள்!

ஏப்ரல் மாதம் 6, 13 தேதிகளில் ரிவர் வொண்டர்ஸில் முகாம்களில் இரவு முழுவதும் தங்கிச் செல்லும் அனுபவத்தைப் பெறலாம். அதற்காக உங்களுடைய சொந்த கூடாரத்தைக் கொண்டு வரலாம். கூடாரம் இல்லையென்றால் வாடகைக்குப் பெறலாம். இதற்கு கட்டாயம் முன்பதிவு செய்யவேண்டும்.

படங்கள்:
வனவிலங்கு காப்பகம்